**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S.106/2024**
**Chief Examination of PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | Shanmugam |
| Father's Name | : | Kuppusamy |
| **Village** | : | ராஜாந்தோப்பு |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | **53** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05.06.2025.**

**வாதி தரப்பில் சாட்சியம்:**

நான் தற்போது ராஜாந்தோப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கினை நிருபணம் செய்வதற்காக இந்த முதன்மை பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 06.09.1980 தேதியில் மேற்படி சின்னகன்னு அம்மாள் காந்தி என்பவருக்கு எழுதி கொடுத்த அசல் தான பத்திரம் தாக்கல் செய்கிறேன் அது **வசாஆ1** ஆகும். மேற்படி வழக்கு சொத்தான சர்வே எண் 114/2க்கு வில்லங்க சான்றினை தாக்கல் செய்கிறேன் அது **வசாஆ2** ஆகும். எனக்கு வழங்கப்பட்ட சிட்டா புல எண் 114/2ட பட்டா எண் 227 முறையே **வசாஆ3** ஆகும். எனது பெயரில் உள்ள அடங்கல் பதிவேடு **வசாஆ4** ஆகும். நான் 22.03.2022ம் தேதி 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வசாஆ5**. அதனை பெற்றுக்கொள்ளாமல் 1ம் பிரதிவாதிகளிடம்ம் திரும்பி வந்த திருப்புதல் கவர் முறையே **வசாஆ6** மற்றும் **வசாஆ7** ஆகும். தாவாபடி தீர்ப்பு ஆக வேண்டுகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்